# சுதந்திர தினம்

விளம்பரச் சிறப்பிதழ் 15.08.2024

## ராயல் ஏஞ்சல் டுட்டோரியல் கல்லூரியில் சேர அழைப்பு

திருப்பூர், ஆக. 15: ராயல் ஏஞ்சல் டுட்டோரியல் கல்லூரியில் சேர்ந்து கடந்த 26 ஆண்டுகளாக திருப்பூரில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தேர்ச்சியடைந்துள்ளனர். இதில் 15 ஆயிரம் பேர் அரசு பணியில் உள்ளனர். இந்த ஆண்டு முதல் வீட்டில் இருந்து டிகிரி படிக்கும் முறை டிப்ளமோ, நர்சிங் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 10ம் வகுப்பு படித்தவர்கள் நேரடியாக 12ம் வகுப்பு தேர்வு எழுதலாம். அடிப்படை கல்வி 8ம் வகுப்பு படிக்காதவர்கள் நேரடியாக 10ம் வகுப்பு படிக்கலாம். 10ம் வகுப்பு தோல்வியடைந்தாலும் டிப்ளமோ படிக்கலாம்.

கல்லூரியில் சேருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும். வேலைக்கு சென்று கொண்டே படிக்கலாம். கல்விக்கடன் மற்றும் தவணை முறையில் கட்டணம் செலுத்தும் வசதியும் உள்ளது. ஆசிரியர் பயிற்சி, பி.எட்., எம்.எட். போன்ற படிப்புகளும் படிக்கலாம். 100 சதவீதம் தேர்ச்சி உத்தரவாதம் வழங்கப்படும் என கல்லூரி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், விவரங்களுக்கு 98422 46174 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

SRI GURU SARVA CA ACADEMY
A PROFESSIONALISED GURUKULAM FOR STUDENTS
AN ISO 9001 : 2015 CERTIFIED INSTITUTE
ISO 9001:2015
Full Time Classes
Vijayadasami Admissions Open for
CA FOUNDATION & INTERMEDIATE
Eligibility : 12th or Any Degree
Tirupur. Call us : 96009 22888, 0421-4246677.
www.srigurusarva.org
78th Happy Independence day

### புரட்சியாளர்களின் போராட்டத்தாலும்–உயிர் தியாகத்தாலும் கிடைத்த

# சுதந்திரத்தை புகழ் மங்காது பேணி காப்போம்..

இன்று நாம் அனைவரும் இந்திய சுதந்திர மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சுதந்திரம் என்பது சுயமாகக் கிடைத்ததில்லை. நாம் இன்று சுதந்திர காற்றை சுவாசிக்க பல போராளிகள் தங்களையும் தங்கள் வாழ்நாளையும் தியாகம் செய்துள்ளனர். இன்று நாம் சுதந்திர இந்தியாவில் வாழ எண்ணற்ற முன்னோர்களின் தியாகம் நடந்துள்ளது. பூமியில் சொர்க்கம் என்பது இருக்குமெனில் அது இந்தியா என பேரரசர் ஜஹாங்கீர் கூறியுள்ளார்.

பூமியில் பல்வேறு பகுதிகளிலிருந்து பலர் பல நோக்கங்களில் இந்தியாவிற்கு படையெடுத்தனர். போர்த்துக்கீசிய மாலுமியான வாஸ்கோடாகாமா இந்திய நாட்டின் நறுமணப் பொருட்களான ஏலம், கிராம்பு, மிளகு ஆகியவை கடல்வழியாக உலகின் கரங்களுக்கு சென்றடைய காரணமாக இருந்தார். ஒருவர்பின் ஒருவராக வாணிப நோக்கில் போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், மற்றும் ஆங்கிலேயர்கள் என பாரதத்துக்குள் உள்நுழைந்தனர். இவர்களுள் ஆங்கிலேயர் கிழக்கிந்திய கம்பெனி என்னும் மாபெரும் அமைப்பை உருவாக்கினர். ஆங்கிலேயரின் அதிகாரம் மேலோங்க அரசர்களும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் சென்றனர். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர் போத்துக்கீசியர்களை விரட்டினர். மன்னர் ஆட்சி பகுதிகள் மாகாணங்கள் ஆக்கப்பட்டன. மன்னர்களிடம் இருந்து வரி வசூலிக்கப்பட்டது. வரி செலுத்தவில்லை என்றால் கடும் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். தாய்மண்ணில் வாழ்வதற்கு வரி செலுத்தும் அவல நிலையை இந்தியர்கள் அனுபவித்தனர். ஒரு சிலர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்தனர். அவர்களுள் வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவன், மருதுசகோதரர்கள் போன்றவர்களைக் குறிப்பிட்டு கூறலாம். இவர்கள் இந்திய விடுதலை முழக்கமிட்டு இன்னுயிர் நீத்தனர். விடுதலை விருட்சம் காந்தியடிகளின் வருகை போராட்ட வரலாற்றில் புதுமையான அத்தியாயத்தை உருவாக்கியது.



காந்தியடிகள் தனது போராட்ட ஆயுதமாக அகிம்சையைக் கையில் எடுத்தார். இதனைத் தடுக்க ஆங்கிலேயர் பல முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் அவை தோல்வியடைந்தன. 1919ம் ஆண்டில் ஆங்கிலேயர் அரங்கேற்றிய மாபெரும் ரத்த சரித்திரம் படைத்த "ஜாலியன் வாலாபாக்" படுகொலைச் சம்பவம் நீங்கா ரத்த வாடையை ஆங்கிலேயர் கையில் படரச் செய்தது. சோதனைகள் வந்தும் விடுதலை வேட்கை தணியவில்லை. உப்புச் சத்யாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் என்பன இந்தியர்களை ஒரே நேரத்தில் ஒருங்கிணைத்தது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பல்வேறு வீரர்களின் உன்னதமான பங்களிப்பு போற்றுதற்குரியது ஆகும். குறிப்பாக காந்தியடிகள், நேருஜி, பகத்சிங், பாரதியார், வாஞ்சிநாதன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் போன்ற பல போராளிகளின் அயராத உழைப்பும் பாரத தேசத்தின் மீது கொண்ட பற்றுமே இன்று சுதந்திரக் காற்றை நாம் அனுபவிக்க வழிவகை செய்தது எனலாம். இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட மாபெரும் பொருளாதார நெருக்கடியானது ஆங்கிலேயருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அதேவேளை இந்தியர்களின் தொடர் போராட்டத்திற்கும் இவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதன் காரணமாக 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் இந்தியாவிற்கு சுதந்திரத்தினை வழங்கினர். இன்று நாம் 77 வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு சன்மானமாக சுதந்திரம் கிடைத்தது. பல தியாகங்களால் தீட்டப்பட்ட நம் சுதந்திர இந்தியாவை அவர்களின் புகழ் மங்காத வகையில் வளர்ச்சியடையச் செய்து பேணி காப்பது நம் அனைவரது கடமையாகும்.

இனிய சுதந்திர தின நல்வாழ்த்துக்கள் !
தேசம் காத்த தியாகிகளுக்கு வீர வணக்கம்...
SUBASH MATRIC.Hr.Sec.SCHOOL
MURUGAMPALAYAM TIRUPUR
Sincere and Systematic Study Secures Success
சுபாஷ் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி
முருகம்பாளையம், திருப்பூர்.
செல் : 98659 71177, 98948 87170

# வேலூர் கலகம்

சுதந்திர போராட்டத்தில் புரட்சியணியில் எஞ்சியிருந்த வீரர்களை, அவர்களது பின்னணியைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமலேயே ஆங்கிலேயர்கள் வேலூர்க்கோட்டையில் பணியமர்த்தினர். ஐரோப்பியத் துருப்புகள் தவிர, 23ம் படைவகுப்பின் இரண்டவது பட்டாளப்பிரிவும் வேலூர் கோட்டையில் இருந்தது. இந்த இரண்டாவது பட்டாளப்பிரிவு முழுவதும், புரட்சி ஒடுக்கப்பட்ட பின்னர், திருநெல்வேலியிலிருந்து தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்ட வீரர்களைக் கொண்டதாகும்.

மேலும் வேலூர்கோட்டையில் திப்பு சுல்தான்களின் மகன்கள் குறிப்பாக மூத்த மகன் பத்தே ஹைதர் இருப்பதை அவர்கள் கண்டனர். பத்தே ஹைதர் சிறையிருந்த போதும் பல்வேறு குறு நிலத் தலைவர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டு புரட்சியை மீண்டும் வடிவமைக்கும் துடிப்புடன் செயல்பட்டார். மேலும் புரட்சியாளர்களுக்கு மரணதண்டனை விதித்து அதனைத் தாமே தலைதாங்கி நடத்திய அக்னியூ வேலூர்க்கோட்டைத் தலைமையதிகாரி. எனவே புரட்சியாளர்கள் வேலூரை தமது நடவடிக்கைக்கான ஒரு மையமாக மாற்றினர். இதே சமயத்தில் இராணுவ வீரர்கள், நெற்றியில் சமய வழிபாட்டுச் சின்னங்கள் எவையும் அணியக் கூடாதென்றும், காதணி போன்ற அணிகலன்கள் அணியக் கூடாதென்றும் அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. புதிய வடிவிலமைந்த தலைப்பாகையினை அணிய வேண்டுமென அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். இது வீரர்களிடையே கொதிப்பினை ஏற்படுத்தின. எனவே பிரித்தானியரின் அதிகாரத்தை வீழ்த்த வேண்டுமென புரட்சியாளர்கள் தீர்மானித்தனர். பள்ளிகொண்டா, வாலாஜாபாத், சித்தூர், ஆற்காடு, ஸ்ரீகாகுளம், ஐதராபாத் ஆகிய இடங்களில் தமக்கு ஆதரவு தேடினர். எனினும் மற்ற பகுதிகளின் புரட்சியணியினர் வேலூரில் நடக்கப்போகும் புரட்சியின் சாதக பாதகங்களை அறியக் காத்திருந்தனர். திப்புவின் கொடியை கொடிமரத்தில் ஏற்றினர். இதைத் தொடர்ந்து வாலாஜாபாத்திலும், ஐதராபாத்திலும் 13ம் தேதியன்று சிறுகலகம் ஏற்பட்டது. கர்னல் கில்லிஸ்பி வேலூர்க்கோட்டையின் கதவை உடைத்து உள்ளே நுழைந்தான் 113 ஐரோப்பிய இராணுவ வீரர்களை இழந்த பிரித்தானியப் படை புரட்சியாளர்கள் 350 பேரை கொன்று 500 பேரைச் சிறை செய்து, கோட்டையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

நல்லாசிரியர் ராஜ கலைஞன் அப்துல்கலாம் விருதுகள் பெற்ற
திருப்பூரின் No.1 டுட்டோரியல்
அரசு பதிவு எண் : 302/09/TPR
RAC Learn to Lead. Since 1999 Govt.Reg.No.302/09/TPR
Royal Angell Tutorial College
Learn to Lead...
NO.1 TUTORIAL
▸ 8th, 10th, +1, +2 அரசுத்தேர்வுகள் எழுதலாம்.
▸ 8வது படிக்காமலேயே 10-வது படிக்கலாம்.
▸ 11வது படிக்காமலேயே 12-வது படிக்கலாம்.
▸ கல்விக்கடன் வசதி உண்டு.
▸ TC தேவையில்லை.
Diploma நர்சிங் மற்றும் அனைத்து டிகிரிகளும் படிக்கலாம்.
வேலைக்கு சென்று கொண்டே படிக்கலாம்.
TTS குமரன் டவர், காமராஜ் ரோடு, பழைய பேருந்து நிலையம், திருப்பூர்.
98422 96174 / 94423 96174

வெள்ளகோவில் நகராட்சி
திருப்பூர் மாவட்டம்
நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விபரம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | அம்ரூத் 2.0 2022-23 | குடிநீர் மேம்பாட்டுத் திட்டப்பணிகள் | 36.44 |
| 2. | மூலதன நிதித்திட்டம் 2023-24 | வடிகால் அமைக்கும் பணிகள் | 4.60 |
| 3. | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-24 | சந்தை மேம்பாட்டு பணிகள் | 1.74 |
| 4. | 15-வது மத்திய மானிய நிதிக்குழு திட்டம் (2023-2024) (Un Tied) | தார்சாலைகள் சீரமைக்கும் பணிகள் | 2.71 |
| | | மொத்தம் | 45.49 |

கனியரசி முத்துக்குமார் தலைவர்
விஜயலட்சுமி குமாரவேல் துணைத்தலைவர்
நகர்மன்ற உறுப்பினர்கள் : ச.கலையரசி, பெ.லோகாம்பாள், ரா.மணி, சே.செல்வராஜ், மு.கண்ணகி, மு.ராதாமணி, சி.விஜயலட்சுமி, செ.விஜயலட்சுமி, வெ.விஸ்வேஸ்வரன், ப.சந்திரசேகர், க.பிரபு, க.மணி சு.சுஜாதா, கோ.சொர்ணாம்பிகை, ச.கலையரசி, சு.முத்துலட்சுமி, வா.விஜயலட்சுமி, கா.நளினி, சு.ராம்குமார்.
S.வெங்கடேஷ்வரன் நகராட்சி ஆணையாளர்
M.திலீபன் நகராட்சி பொறியாளர்

## சுதந்திர தினத்தன்று முதலமைச்சர்கள் தேசிய கொடி ஏற்றும் உரிமையை பெற்றுத் தந்தவர் கலைஞர்

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய நாட்களில் மாநில ஆளுநர்களே தேசியக் கொடியை ஏற்றும் உரிமையுடையவர்களாக இருந்தனர்.

தேசிய அளவில், சுதந்திர தினத்தில் பிரதமரும், குடியரசு தினத்தில் ஜனாதிபதியும் கொடியேற்றும் உரிமையுடையவர்களாக இருக்கும்போது, மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தலைமை வகிக்கும் முதல்வர்களுக்கு கொடி ஏற்றும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர் கருணாநிதி. இதனால், 1972ம் ஆண்டு சுதந்திரத்தின் வெள்ளி விழாவையொட்டி இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சுதந்திர தினத்தில் அந்தந்த மாநில முதல்வர்கள், தலைமைச் செயலகத்தில் கொடியேற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. இந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் கருணாநிதி.

THEERAN CHINNAMALAI COLLEGE OF ARTS AND SCIENCE FOR WOMEN
(Affiliated to Bharathiar University, Coimbatore) (Managed by Kongu Vellalar Trust)
Avinashi to Mangalam NH Road, Vanjipalayam, Tirupur - 641663
tcwcas@gmail.com www.theerancas.in 94437 38844, 98422 86004
COURSES OFFERED
• B.Com
• B.Com CA
• B.Com Business Analytics
• B.Com Accounting & Finance
• BBA
• B.SC Computer Science with Artificial Intelligence
• B.SC IT (Information Technology)
• B.SC CDF
• B.SC Food Science and Nutrition
• B.SC Microbiology
ONLY FEW SEATS AVAILABLE
For Admission Contact : 88708 82073
பெஸ்ட் ராமசாமி தலைவர் - தாளாளர்
கீதாஞ்சலி S.கோவிந்தப்பன் செயலாளர்
ஒகே M.கந்தசாமி பொருளாளர்
PVS P.முருகசாமி துணைத்தலைவர்
டிக்சன் R.குப்புசாமி துணைத்தலைவர்
NDM N.துரைசாமி இணைச்செயலாளர்
Dr.ரேச்சல் நான்சி பிலிப் M.Com., M.Phil., B.Ed., Ph.D கல்லூரி முதல்வர்

INDEPENDENCE DAY SALE
POLYESTER FABRICS
WALRUS YES INDIA CAN
Upto 50% Off
Limited Stock Limited Period
Starts From Rs.99/- KG
New Busstand, Tirupur | Cell: 90420 77722